JUNE 2011
JULY

**8001**

Register Number

# தமிழ் - முதல் தாள்

# Language – Part A – TAMIL – Paper I

நேரம் : 2 $\frac{1}{2}$ மணி ]                    [ மொத்த மதிப்பெண்கள் : 100

*குறிப்பு* : i) விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும் இருத்தல் வேண்டும்.

ii) வினா எண் IV - க்குச் செய்யுள் வடிவில் விடை எழுதுதல் வேண்டும்.

I. கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் எட்டனுக்கு மட்டும் ( ஒவ்வொன்றிற்கும் மூன்று வரிகளுக்கு மிகாமல் ) விடை எழுதுக : 8 × 2 = 16

1. ஏன் அறநெறி ஓங்குதல் வேண்டும் ?

2. உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் - ஏன் ?

3. பொறுத்தல் எப்போது நிகழ வேண்டும் ?

4. தமிழிலுள்ள பெருங்காப்பியங்களை எழுதுக.

5. கொலையாளிகளின் கொடுஞ்செயல்கள் யாவை ?

6. கடலின் கவின்மிகு காட்சி யாது ?

7. பாணன் எங்குப் பாடினான் ? எவ்வளவு நேரம் பாடினான் ?

8. ஆண்பால் பிள்ளைத் தமிழுக்குரிய பத்துப் பருவங்கள் யாவை ?

9. தொன்னையுள்ளம் - எது ?

10. கடல் புதல்வியாய் யாரைப் பெற்றுள்ளது ?

[ Turn over

II. கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு மட்டும் ( ஒவ்வொன்றிற்கும் ஆறு வரிகளுக்கு மிகாமல் ) விடை எழுதுக : $3 \times 5 = 15$

11. திரு. வி. க. பற்றி குறிப்புவரைக.

12. கவிஞர் தமிழை எவ்வாறு வாழ்த்துகிறார் ?

13. சினங் கொள்வார்க்கு வரும் தீங்கினை விளக்குக.

14. சீதையைக் கண்ட அனுமனின் மகிழ்ச்சியை விவரிக்க.

15. திருவேங்கடத்து இறைவனை நம்மாழ்வார் எங்ஙனம் போற்றியுள்ளார் ?

III. கீழ்க்காணும் வினாக்களுள் ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் பதினைந்து வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக : $1 \times 7 = 7$

16. இடனறிதல் பற்றி வள்ளுவர் கூறும் கருத்துக்களைத் தொகுத்துத் தருக.

17. மங்கல வாழ்த்துப் பாடலால் தெரியவரும் கண்ணகி, கோவலன் பண்பு நலன்களை விளக்கி எழுது.

18. குறத்தி கூறும் குற்றால மலை வளத்தைத் தொகுத்து எழுது.

19. பாரதிதாசன் உலக ஒற்றுமை பற்றிக் கூறும் கருத்துக்களைத் தொகுத்தெழுதுக.

IV. பின்வருவனவற்றை அடிபிறழாமல் எழுதுக : $2 + 2 + 3 + 3 = 10$

20. 'ஆக்கம்' எனத் தொடங்கும் குறளையும், 'அரிது' என முடியும் குறளையும் எழுதுக.

21. அ) 'வீடின தன்றறன்' எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடலையும்,

ஆ) 'பிறர் தன்னைப்' எனத் தொடங்கும் திரிகடுகப் பாடலையும் எழுதுக.

V. கீழ்க்காணும் அனைத்து வினாக்களுக்கும் விடை எழுதுக :

சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக : 10 × 1 = 10

22. கந்தர் கலிவெண்பாவை இயற்றியவர்

அ) குமரகுருபரர்

ஆ) திரிகூடராசப்பர்

இ) கச்சியப்பர்.

23. கம்பரைப் புரந்த வள்ளல்

அ) குமண வள்ளல்

ஆ) சடையப்ப வள்ளல்

இ) பாரி வள்ளல்.

24. நகையும் உவகையும் கொல்லுஞ் சினத்தின்

பகையும் உளவோ பிற

இக்குறட்பாவில் .................... அமைந்துள்ளது.

அ) மோனை

ஆ) எதுகை

இ) இயைபு.

25. நெருப்பு என்னும் பொருள் தரும் சொல் சேர்ந்தாரைக் .................... .

( கொல்லி / கொள்ளி )

[ Turn over

26. புகார்க் காண்டத்திலுள்ள காதைகள்

அ) 7

ஆ) 10

இ) 13.

27. 'வெற்றிடமின்றி' என்னும் தொடரைப் பிரிக்கும் முறை

அ) வெற்றிடம் + இன்றி

ஆ) வெறுமை + இடம் + இன்றி

இ) வெறுமை + இடமின்றி.

28. பொருத்துக :

| *சொல்* | | *பொருள்* |
|---|---|---|
| அ) தொடை | — | திரை |
| ஆ) நறை | — | மாலை |
| | — | தேன். |

29. பொழில் என்பதன் பொருள்

அ) சுனை

ஆ) சோலை

இ) மலை.

30. கீழ்க்காணும் குறட்பாவைச் சீர்பிரித்து எழுதுக :

ஒன்றா உலகத்துயர்ந்த புகழல்லாற்
பொன்றாது நிற்பதொன்றில்

கோடிட்ட இடங்களில் சரியான எழுத்தைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

31. அன்றே இ .......... வன் அவன்றாள் சர .......... ங்கள் அன்றே.
( ரை, றை ) ( ண, ன )

VI. கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் **ஐந்தனுக்கு** மட்டும் ( ஒவ்வொன்றிற்கும் மூன்று வரிகளுக்கு மிகாமல் ) விடை எழுதுக : 5 × 2 = 10

32. உள் வளத்திறமை என்பது என்ன ?

33. அறிவுரை கூறுதல் பற்றி மு. வ. அவர்களின் கருத்து யாது ?

34. சிதம்பரனாரின் வாக்கு வன்மைக்குச் சான்று தருக.

35. 'பெரியார்' என்னும் சொல் எதனை நினைவுக்குக் கொண்டு வருகிறது ?

36. பொருள்களின் மூன்று உருவ நிலைகள் யாவை ?

37. சீறாப்புராணம் எங்கு, எவர் உதவியால் அரங்கேற்றப்பட்டது ?

38. செல்வர்கள் ஔவையாரிடம் வேண்டியது என்ன ?

VII. கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும் ( ஒவ்வொன்றிற்கும் ஆறு வரிகளுக்கு மிகாமல் ) விடை எழுதுக : 3 × 5 = 15

39. இந்திய நாட்டின் இயற்கைத் தாது, கனிம வளம் பற்றி விளக்குக.

40. பண்டைத் தமிழ் மன்னர்கள் சிறந்த மதிப்பாக எதனைக் கருதினர் ?

41. சுதேசி நாவாய்ச் சங்கம் - குறிப்பெழுதுக.

42. நீர்ப்பொருளின் சுருங்கா இயல்பு - விளக்குக.

43. சீதக்காதியின் சிறந்த பண்புகள் யாவை ?

VIII. கீழ்க்காணும் வினாக்களுள் ஏதேனும் **ஒன்றனுக்கு** மட்டும் ( பதினைந்து வரிகளுக்கு மிகாமல் ) விடை எழுதுக : 1 × 7 = 7

44. 'தாய்மொழியிலேயே கல்வி பெறலாம்' என்பதைத் திரு. வி. க. எவ்வாறு நிறுவுகிறார் ?

45. நட்பையும், கணவன், மனைவி வாழ்க்கையையும் மு. வ. எவ்வாறு பொருத்திக் காட்டுகிறார் ?

46. பெரியாரின் மதுவிலக்குத் தொண்டு பற்றித் தொகுத்தெழுதுக.

47. பெண்களுக்கு மனையியல் கல்வி மிக வேண்டற்பாலது என்பதனை விளக்கு.

IX. கீழ்க்காணும் **அனைத்து** வினாக்களுக்கும் விடை எழுதுக :

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக : 10 × 1 = 10

48. ஒரு துறைக்கோவை என்பது .................... .

அ) அந்தாதி

ஆ) கலம்பகம்

இ) அகத்துறைச் சிற்றிலக்கியம்

49. 1906 ஆம் ஆண்டு நிகழ்ந்த கல்கத்தா காங்கிரஸ் மாநாட்டிற்குத் தலைமை வகித்தவர்

அ) தாதாபாய் நௌரோஜி

ஆ) அன்னிபெசன்ட் அம்மையார்

இ) திலகர்.

50. கீழ்க்காணும் தொடரிலுள்ள சந்திப் பிழையை நீக்குக :

அந்த காலத்தில் சிதம்பரனாரது சொற்பொழிவு இல்லாதக் கூட்டத்தை காண்பதரிது.

51. கீழ்க்காணும் வாக்கியம் எவ்வகை வாக்கியம் ?

நீருக்கு அழுத்தம் உண்டு.

52. பொருத்துக :

அ) இயற்கை இன்பக்கலம் — திருக்குறள்

ஆ) இயற்கை வாழ்வில்லம் — பத்துப்பாட்டு

— கலித்தொகை.

53. வேற்றுமை உருபைச் சேர்த்தெழுதுக :

நட்பு .................... கரும்பை உவமையாகச் சொன்ன இலக்கியம் நாலடியார்.

( ஐ, ஆல், கு, இன் )

54. கீழ்க்காணும் உவமைத் தொடர்களை உருவகத் தொடர்களாக மாற்றுக :

அ) மலர்க்கண் ஆ) பிறைநுதல்

55. கீழ்க்காணும் சொற்களுள் இருபொருள் தரும் ஏதேனும் ஒரு சொல்லை எழுதி, அச்சொல் தரும் இரு பொருளையும் எழுதுக :

அ) இசை ஆ) திரை

இ) மெய் ஈ) மதி.

56. கீழ்க்காணும் தொடரில் ஒருமை-பன்மை பிழை நீக்கி எழுதுக :

எஃகு மற்றும் அலுமினியத் தாது வகைகள் இங்கு ஏராளம் உள்ளது.

57. கீழ்க்காணும் தொகைச் சொற்களுள் ஒன்றினை விரித்து எழுதுக :

அ) முக்காலம் ஆ) நானிலம்.